**R 4881 (page 360)**[தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# நேர்மையாய் இருத்தல் எனும் மாபெரும் பரீட்சை

# LOYALTY THE GREAT TEST

ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவில், மனுஷர்கள் பூரணப்படுத்தப்பட்டிருக்கையில், மனுக்குலத்தின் உலகமானது இறுதி பரீட்சைக்குள்ளாக்கப்படுவார்கள்; அவர்களது மனுஷ சுபாவத்தின் பூரணம் பற்றினதாக இல்லாமல், தேவனுக்காக அவர்கள் கொண்டிருக்கும் நேர்மை பற்றினதாகவே அப்பரீட்சை காணப்படும். இந்த அம்சத்தின் அடிப்படையிலேயே தாயாகிய ஏவாளுக்கான பரீட்சையும் காணப்பட்டது. "தேவனுக்கு நேர்மையாய் இருப்பது" என்பதின் அர்த்தம் தொடர்புடைய விஷயத்தைப் புரிந்துகொள்வதில் அல்லது கீழ்ப்படியாமை என்றால் என்ன என்ற விஷயத்தைப் புரிந்துகொள்வதில் ஏவாள் வஞ்சிக்கப்படவில்லை. தேவன் அவளுக்கு முன்னெச்சரிக்கை கொடுத்திருந்தார். எது சரி என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் அவள் பின்விளைவுகள் குறித்த விஷயத்திலேயே வஞ்சிக்கப்பட்டிருந்தாள். இப்படியாகவே சாத்தானின் விஷயத்திலும் காணப்பட்டது. இவரும் தனது நடக்கையின் விளைவு குறித்த விஷயத்தில், தன்னை வஞ்சித்துக்கொண்டார்; கர்த்தரைப் பொருட்படுத்தாமல், தன்னுடைய திட்டங்களைத் தன்னால் நிறைவேற்றிவிட முடியும் என்று இவர் சிந்தித்துக்கொண்டதில் வஞ்சிக்கப்பட்டுப்போனார்.

இப்படியாகவே ஆயிர வருஷ யுகத்தின் முடிவிலும் காணப்படும் என்று நாங்கள் நம்புகின்றோம். தாங்கள் மேற்கொள்ளும் போக்கினுடைய விளைவு தொடர்புடைய விஷயத்தில் மனுக்குலத்திலுள்ள சிலர் வஞ்சிக்கப்பட்டுப்போவார்கள். தெய்வீகப் பிரமாணத்திற்கு முற்றிலும் நேர்மையாய்க் காணப்படும் அனைவரும், துன்மார்க்கரின் தவறுகளை அடையாளம் கண்டுகொள்வார்கள். ஆயிர வருஷ யுகத்தின்போது, மனுக்குலத்திற்கும், நீதியினுடைய முழுமையான கோரிக்கைகளுக்கும் இடையில் கிறிஸ்து மத்தியஸ்தராகக் காணப்படுவார்; மேலும், மனுக்குலம் பாதுகாக்கப்பட்ட வீட்டாராய்க்

**R4882 : page 360**

காணப்படுவார்கள். தீமையான ஆதிக்கங்கள் அனைத்தும் கட்டுப்படுத்தப்படுகையில், மனுக்குலமானது தேவனுடைய எதிர்ப்பார்ப்புகள் குறித்த முழுமையான அறிவிற்குள் வருவதற்குரிய அனுகூலமான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வார்கள். அவர்கள் திரும்பப்பெறுதலின் ஆசீர்வாதங்களை முழுமையாய் அனுபவித்தப்பிற்பாடு, அவர்கள் நீதியைக் கடைப்பிடித்திருக்கும் விஷயம் வெறும் கொள்கையாக இருக்கின்றதா அல்லது அவர்கள் எந்த ஓர் ஆதிக்கங்களினாலும் நீதியினின்று விலகிவிடாதபடிக்கு தேவனுக்கும், நீதிக்கும் இருதயத்தில் நேர்மையாய் இருக்கும் நிலைமையினை அடைந்திருக்கின்றார்களா என்பதை அறிந்துகொள்ளத்தக்கதாக, அவர்களுக்குப் பரீட்சை வருவது ஏற்புடையதாகும்.

ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவில், மனுக்குலமானது பிதாவினிடத்தில் ஒப்படைக்கப்பட்ட பிற்பாடு, அவர்கள் முழுமையான கீழ்ப்படிதலைக் கற்றுள்ளார்களா அல்லது இல்லையா என்பதைக் காணத்தக்கதாக, அவர் அவர்களைப் பரீட்சிப்பார். தீமையான ஆதிக்கங்கள் கொஞ்சம் காலம் அவிழ்த்துவிடப்படும். ஒருவேளை மனுக்குலத்தார் கீழ்ப்படிதலுக்கான படிப்பினையை முழுமையாய்க் கற்றுக்கொள்ளவில்லையெனில், அவர்கள் நித்திய ஜீவனுக்கு அபாத்திரர்களாக இருப்பார்கள்; இன்னுமாக அவர்களது காரியம் கொள்கையோடு மட்டும் நின்றுவிட்டது என்பதும் நிரூபிக்கப்படும். தேவனுடன் இருதய-இணக்கத்திற்குள் முழுமையாய் வராத காரணமே, நேர்மை தொடர்புடைய இந்தப் பரீட்சையில், குறிப்பாக விழுந்துபோகச் செய்துவிடும்.

## தேவனுக்கு நேர்மையாய் இருக்கும் விஷயத்தில் அனைவரும் பரீட்சிக்கப்பட வேண்டும்

சாத்தான் தேவனுக்கான அவரது நேர்மையின் விஷயத்தில் பரீட்சிக்கப்பட்டார். ஆதாம் மற்றும் ஏவாள், தேவனுக்கான அவர்களது நேர்மையின் விஷயத்தில் பரீட்சிக்கப்பட்டார்கள். நோவாவின் நாட்களில் தேவதூதர்களும் இதேபோன்று பரீட்சிக்கப்பட்டார்கள் - அவர்கள் தவறானவைகளைவிட சரியானவைகளை விரும்பினார்களா என்றல்ல, மாறாக அவர்களது முழுமையான நேர்மை குறித்தே பரீட்சிக்கப்பட்டார்கள். இயேசுவும்கூடப் பிதாவுக்கு அவர் கொண்டிருந்த நேர்மையின் விஷயத்தில் பரீட்சிக்கப்பட்டார். ஆகையால்

**R4882 : page 361**

ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவில், மனுக்குலம் தேவனுடன் உள்ள அவர்களது இருதயத்தின் இணக்கம் தொடர்புடைய விஷயத்தில் பரீட்சிக்கப்படுவார்கள்.

அவர்களது பரீட்சையினுடைய தன்மை எப்படியாக இருக்கும் என்று நமக்குக் குறிப்பிட்டு தெரிவிக்கப்படவில்லை. பூமியின் மீதான ஆளுகையானது, முழுமையாக மனுக்குலத்திற்குக் கொடுக்கப்படுவதற்கு முன்னதாக, அதைக் கைப்பற்றுவதற்குரிய ஆசையே, அநேகமாக அக்காலகட்டத்தில் மனுக்குலத்திற்கு வரும் சோதனையாக இருக்கலாம். ஒருவேளை இப்படியாக இருக்குமானால், ஆயிர வருஷ யுகங்களுடைய முடிவின்போது, பூமியை மனுக்குலத்திற்குத் தேவன் கொடுக்கவேண்டும் என்று நோக்கம்கொண்டிருக்கின்றார் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறபடியால், பூமியெங்கும் பிரபுக்களாக ஆளுகை செய்துகொண்டிருக்கும் முற்பிதாக்களிடமிருந்து அனைத்தையும் உடனடியாகப் பெற்றுவிட வேண்டுமென எதிர்ப்பார்ப்பு கொண்டிருப்பார்கள் (சங்கீதம் 45:16). நேரம் வருகையில் அவர்கள் அதிருப்தியடைவார்கள். "அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துகொண்டார்கள்." (வெளிப்படுத்தல் 20:9)

இது அக்காலத்தில் மனுக்குலத்திலுள்ள அநேகரின் நிலைமையினை எடுத்துக்காட்டும். அவர்களில் அநேகர் அமைதியற்று சஞ்சலமடைவார்கள். அவர்கள் பின்வருமாறு: "இந்த முற்பிதாக்கள் நமக்கு ஆளுகையைத் தராமல் வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். நமக்கும், உலகத்தின் மீதான ஆளுகைக்கும் இடையில் தடையாக எதுவும் காணப்பட வேண்டாம்" என்று கூறுவார்கள். இம்மனப்பான்மையானது தேவனுக்கு நேர்மையற்று இருக்கும் காரியமாகும். அனைத்தும் தெய்வீக ஏற்பாட்டின்படியாகக் காணப்படுகின்றது என்பதை அறிந்தவர்களாக, அவர்கள் பின்வருமாறு கூற வேண்டும்: "ஆயிரம் வருஷங்கள் முடிந்துவிட்டது. இந்த ஆளுகை நமக்குக் கையளிக்கப்படும் என்று நாம் எண்ணியிருந்தோம். ஆனால் இக்காரியத்தை நாம் முழுவதுமாகத் தேவனுடைய கரங்களில் விட்டுவிடுவோம். ஆளுகையை நமக்குத் தருவது நல்லது என்று அவர் எண்ணுவாரானால் சந்தோஷம். ஆனால் காலம் முடிவடைந்தப் பிற்பாடும், ஆளுகையைத் தராமல் வைத்துக்கொள்வது நலம் என்று ஒருவேளை அவர் எண்ணுவாரானால், அதிலும் நாம் திருப்தியாய் இருந்துவிடலாம்." இப்படியாகவே நேர்மையின் மனப்பான்மை காணப்படும்.

இப்படியாகவே இன்றும் காணப்பட வேண்டும். ஒரு தேவன் இருக்கின்றார் என்றும், ஒரு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இருக்கின்றார் என்றும், இவர்களுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும் என்றும் அடையாளம் கண்டுகொள்வதே, நம்முடைய மனப்பான்மையாகக் காணப்பட வேண்டும். ஏற்ற காலத்தில் தேவனுடைய ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமை முழுமையாக விவரிக்கப்படுவதை நாம் காண்போம்; இவை தேவன் அனுமதித்துள்ள அனைத்துக் காரியங்களுக்கும் இசைவாகவே காணப்படுகின்றது என்பதை நாம் காண்போம். இதை விசுவாசத்தினால் காண்பவர்கள், தேவனுக்குரிய தங்களது இருதயத்தினுடைய நேர்மையினை, இப்பொழுது நிரூபித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

-------------------